[30th September 1955

The Hon. Sri B. PARAMESWARAN : In three or four cases, recognition to the hostel concerned has been withdrawn and the grants have been stopped. The honorary Inspector has been appointed only recently and he has got to tour the whole State and suggest ways and means for rectifying the mistakes.

Sri P. G. MANICKAM : சபாநாயர் அவர்களே, உதவி பெறும் ஹரிஜன ஹாஸ்டல்கள் சரியான பிரகாரம் நடக்காத காரணத்தினாலே எல்லா ஹரிஜன் ஹாஸ்டல்களையும் கவர்மெண்டே நடத்துவதற்கு ஒரு திட்டம் ஏற்கெனவே வகுக்கப்பட்டிருக்கிறது. அத்திட்டத்தை அமுலுக்குக் கொண்டுவர அரசாங்கத்தார் முன்வருவார்களா ?

The Hon. Sri B. PARAMESWARAN : எல்லா ஹாஸ்டல்களையும் கவர்ண்மெண்ட் நடத்துவதற்குப் போதிய பணவசதி இல்லை. அப்படி நடத்துவதும் சரியல்ல. எனென்றால் பொது மக்களுக்கு ஹாஸ்டல்கள் நடத்துவதிலே உற்சாகம் இருக்கவேண்டும். ஆகையால் எங்கு எங்கு ஹாஸ்டல்கள் சரியாக நடக்கவில்லை என்று தெரிகிறதோ, எங்கெல்லாம் அரசாங்கத்தார் நடத்துவதற்கு வசதி இருக்கிறதோ அங்கே எல்லாம் அரசாங்கத்தார் எடுத்து நடத்திக்கொண்டிருக்கிறார்கள்.

Sri S. RAMALINGAM : ஹானரரி இன்ஸ்பெக்டரை நியமித்திருப்பதாக மந்திரியவர்கள் சொன்னார்கள். அந்த இன்ஸ்பெக்டர் உத்தியோகஸ்தரா ? அல்லது உத்தியோகப் பற்றற்றவரா ? அவருடைய பெயர் என்ன ? அவர் என்ன என்ன விஷயங்களை விசாரித்து சர்க்காருக்கு ரிப்போர்ட் கொடுக்கும்படி சொல்லியிருக்கிறார்கள் ?

The Hon. Sri B. PARAMESWARAN : அவர் பெயர் ஸ்ரீ பாஷ்யம் அய்யங்கார், அவர் உத்தியோகப் பற்றற்றவர். அவர் ஹாஸ்டல்கள் நிர்வாகங்களைப் பரிசீலனை செய்து ரிப்போர்ட் சமர்ப்பிக்கவேண்டுமென்று சொல்லப்பட்டிருக்கிறது.

Sri M. PALANIYANDI : இதுமாதிரியான உணவு விடுதிகள் இருப்பதன் காரணமாக தாழ்த்தப்பட்ட, பிற்பட்ட வகுப்புகளைச் சேர்ந்த குழந்தைகளை எல்லாம் தங்களுடைய இல்லங்களில் படிப்பதற்கு வசதி இல்லாத காரணத்தால் கூட்டு முறையில் படிப்பதற்கு வசதி இருக்கிறது. அரசாங்கச் சட்டப்படி தனிப்பட்டோர் இன்னும் ஹாஸ்டல்கள் திறக்க முன்வந்தால், அதிகமான ஹாஸ்டல்களை நடத்துவதற்கு அரசாங்கம் முன்வருமா ?

The Hon. Sri B. PARAMESWARAN : சில ஹாஸ்டல்கள் சரியாக நடக்கவில்லை என்று புகார்கள் வந்துகொண்டிருப்பதினால் 1956-லிருந்து அரசாங்கத்தாருடைய உத்திரவு இல்லாமல் ஹாஸ்டல்கள் நடத்துவதற்கு உத்திரவு கொடுக்கமாட்டோம்.

Sri A. IYANAR : ஸார், ஆனரரி இன்ஸ்பெக்டர்களுக்கு ஏதாவது அலவன்ஸ் அதாவது பிரயாணப்படி உண்டா என்பதைத் தெரிந்து கொள்ள விரும்புகிறேன்.

The Hon. Sri B. PARAMESWARAN : அவர்களுக்கு பிரயாணப்படி மாத்திரம் உண்டு. அது இல்லாமல் அவர்கள் எப்படிப் போக முடியும்.

Educational qualification for public services in Pudukkottai

* 2595 *Q.*—Sri V. BALAKRISHNAN : Will the Hon. the Minister for Finance be pleased to state—

(*a*) whether the pre-merger Pudukkottai State Government had prescribed the eligibility qualification of S.S.L.C. for admission to appointments and promotions in Public Services of the

30th September 1955]

Government as per proceedings R.C.A. No. 6-2157 of 1942, dated 11th March 1942, reiterated in their subsequent proceedings published in the *Pudukkottai State Gazette*, Part I, pages 3 and 4, dated 22nd January 1946;

(*b*) whether the post-merger Madras State Government have refused to recognize for promotions, absorptions, etc., the employees in category (*a*) above with several years of service under the former Pudukkottai State Government;

(*c*) if so, the number so affected among the Pudukkottai State employees after merger; and

(*d*) the reasons for the refusal?

THE HON. SRI C. SUBRAMANIAM : (*a*) Yes, Sir.

(*b*) No, Sir. There is no question of this Government refusing to recognize the qualifications, prescribed by the former Pudukkottai State, for entry into Government services. For entry into Ministerial and other superior posts under this Government the service rules prescribed a minimum general educational qualification. Yet numerous Pudukkottai employees, who do not possess such qualifications have been absorbed under State Government Services either by condoning their deficiency in qualification or by relaxing the qualification rules in individual cases. The State Government have adopted a generous and sympathetic view in regard to the continuance of the State employees without rigidly enforcing the Madras Rules immediately and in most cases have considered the qualification prescribed by the Pudukkottai Durbar as almost equivalent to those prescribed by the Madras State. Their further promotions in this State, however, are governed by the Statutory Rules that are in force in this State.

(*c*) & (*d*) There are fifty such unqualified employees of the Pudukkottai State. All of them have been absorbed in the services of the Madras Government by relaxing the relevant statutory rules in their favour wherever necessary. After absorption they will be considered on a par with those of the Madras Government and their further promotions will be governed only by the statutory rules in force in this State.

SRI V. BALAKRISHNAN : Sir, while it is true they have been absorbed in the service, is it a fact that further promotion of these persons is covered by the present statutory rules of the Government and this bars them from becoming eligible for promotions to the higher posts under the present set up?

THE HON. SRI C. SUBRAMANIAM : Sir, if they do not satisfy the prescribed qualifications for promotion to higher posts, certainly they cannot expect to be promoted.